**தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் சங்கமம்- நம்ம ஊரு திருவிழாவிற்கான கலைக்குழுக்கள் தேர்வு 38 மாவட்டங்களிலும் மார்ச் 22 மற்றும் 23 ஆகிய நாட்களில் நடைபெறுகிறது**

## கலைக்குழுவினருக்கான விதிகள்

1) கலைஞர்களின் கோரிக்கை அடிப்படையில் 38 மாவட்டங்களிலும் வீடியோ பதிவு மேற்கொள்ளப்படுகிறது. இப்பதிவுக்கு வரும் கலைஞர்களுக்கு மதிப்பூதியம்,போக்குவரத்து செலவினங்கள் வழங்கப்படாது. தனி நபர் நிகழ்ச்சி அனுமதி இல்லை. குழுவாக மட்டுமே பங்கேற்க வேண்டும்.

2) மார்ச் 22 சனிக்கிழமை நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவி, காளை, மயிலாட்டம், பறை , பம்பை கைச்சிலம்பு, இறை நடனம், துடும்பாட்டம், ஜிக்காட்டம் கிராமிய பாட்டு மற்றும் பல்சுவை நிகழ்ச்சி வழங்கும் கலைக்குழுக்கள்

மார்ச் 23 ஞாயிறு தெருக்கூத்து, இசை நாடகம், நாடகம், கனியான்கூத்து, பொம்மலாட்டம், தோல் பாவைக்கூத்து, வில்லுப்பாட்டு தேவராட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், மல்லர் கம்பம், கும்மி, கோலாட்டம், மரக்கால் ஆட்டம், பரதநாட்டியம், பழங்குடியினர் நடனம் நிகழ்ச்சி நடத்துவோர் மற்றும் இதில் வகைப்படுத்தாத கலைக்குழுக்கள் பங்கேற்க வேண்டும்..

3) கலைக்குழுவில் உள்ள அனைத்து கலைஞர்களின் பெயர், ஆதார் எண், செல்பேசி எண் விவரங்களை பதிவு நாளன்று அளிக்க வேண்டும். ஒரு குழுவில் நிகழ்ச்சி வழங்கியவர்கள் வேறொரு குழுவில் வீடியோ பதிவில் பங்கேற்கக்கூடாது. வீடியோ பதிவு செய்தவுடன் கலைக்குழுவில் உள்ள அனைத்து கலைஞர்களின் குழுப் புகைப்படம் எடுக்கப்படும்.

4) நிகழ்ச்சி 5 நிமிட வீடியோவாக பதிவு செய்யப்படும். கூடுதல் நேரம் வழங்கப்படாது. குழுவில் உள்ள அனைத்து கலைஞர்களும் நிகழ்ச்சி வழங்கும் வகையில் இந்நிகழ்ச்சியினை முன்கூட்டியே ஒத்திகை செய்து சரி செய்து வீடியோ பதிவு நாளில் வர வேண்டும். கூத்து மற்றும் நாடகக்கலைஞர்களும் பெரும்பலான கலைஞர்கள் பங்கு பெறும் வகையிலான ஏதேனும் ஒரு காட்சியினை மட்டும் 5 நிமிடங்கள் நடத்திட வேண்டும்.

5) பரதநாட்டியம், சிலம்பம், மல்லர்கம்பம் உள்ளிட்ட அனைத்து குழுக்கள் ஒலிப்பதிவு பயன்படுத்தக்கூடாது. பக்க இசைக்கலைஞர்களுடன் பங்கேற்க வேண்டும். பறை, பம்பை உள்ளிட்ட கருவிகள் பைபர் கருவிகள் பயன்படுத்தக்கூடாது. தோல் கருவிகள் மட்டுமே பயன்படுத்த வேண்டும். 18 வயதுக்கு கீழ் உள்ளவர்கள் இத்தேர்வில் பங்கேற்கக்கூடாது.

6) சங்கமம் நிகழ்ச்சிக்கு தேர்வு செய்யப்பட்டால் வீடியோ பதிவில் உள்ள கலைஞர்களை மட்டுமே நிகழ்ச்சிக்கு பயன்படுத்த வேண்டும்.இதில் யாருக்கேனும் வர இயலாத நிலை இருந்தால் அவர்களை தவிர இதர கலைஞர்கள் மட்டுமே நிகழ்ச்சி நடத்த வேண்டும்

7) கலை பண்பாட்டுத்துறையின் சார்பில் அமைக்கப்படும் தேர்வுக்குழு முதற்கட்டமாக மண்டல அளவிலான சங்கமத்திற்கு நிகழ்ச்சி வழங்க்கூடிய 160 கலைக்குழுக்களை தேர்வு செய்யும். ஒரு குழுவை மொத்தமாகவோ பகுதியாகவோ எடுத்துக்காட்டாக நையாண்டி மேளம் மட்டும் அல்லது கரகம், காவடி போன்றோரை மட்டுமே தேர்வு செய்யவும் தேர்வுக்குழுவிற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானது. மண்டல அளவிலான நிகழ்ச்சிக்கு ஒரு கலைஞருக்கு ரூ 3000/- வீதம் அவரவர் வங்கி கணக்கில் மட்டுமே அளிக்கப்படும்.அனைவருக்கும் புதிய ஆடை வழங்கப்படும்.

8) மண்டல அளவிலான நிகழ்ச்சிகளின் . வீடியோ பதிவு சென்னையில் கலை பண்பாட்டு இயக்ககத்திற்கு அனுப்பப்படும். 180 கலைக்குழுக்களிலிருந்து 40 கலைக்குழுக்கள் சென்னை சங்கமம் நிகழ்ச்சி வழங்கும் வகையில் மாநில அளவிலான தேர்வுக்குழுவால் தேர்வு செய்யப்பட்டு ஜனவரி 2026 நடைபெறும் விழாவில் நிகழ்ச்சி வழங்குவார்கள்.சென்னை சங்கமம் நிகழ்ச்சிக்கு ஒரு கலைஞருக்கு நாளொன்றுக்கு ரூ 5000/- வீதம் நான்கு நாட்களுக்கு ரூ 20000/- அளிக்கப்படும். புதிய ஆடைகளும் வழங்கப்படும். தங்குமிடம், உணவு ஏற்பாடுகளும் செய்யப்படும். போக்குவரத்து செலவினம் வழங்கப்படும்.

கலை பண்பாட்டுத்துறையின் இணையத்தளத்தில் (**www.artandculture.tn.gov.in**)

கூகுள் Form இணைப்பு உள்ளது அதன் வாயிலாக 20.03.2025 க்குள்பதிவு செய்துக் கொள்ளவும். பதிவு செய்ய இயலாத கலைஞர்கள் 20.03.2025 க்கு பிறகு மாவட்ட பொறுப்பு அலுவலரை பணி நேரத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணிக்குள்ளாக தொடர்புக் கொள்ளலாம்.பொதுவான சந்தேகங்களுக்கு 91500 85001 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மெசேஜ் அனுப்பி விவரம் பெறலாம்.

| எண் | மாவட்டம் | பெயர் | பணி | செல்பேசி எண் |
|---|---|---|---|---|
| **1** | **சென்னை** | பா.ஹேமநாதன் | துணை இயக்குநர், கலை பண்பாட்டுத்துறை | 9443274852 |
| **2** | **திருவள்ளூர்** | நீலமேகன் | உதவி இயக்குநர்,காஞ்சிபுரம் மண்டலம் | 9444668932 |
| **3** | **செங்கல்பட்டு** | சிவக்குமார் | உதவியாளர், சிற்பக்கல்லூரி | 7358628242 |
| **4** | **காஞ்சிபுரம்** | சுப்பிரமோனி | வயலின் ஆசிரியர், இசைப்பள்ளி | 9841531944 |
| **5** | **திருவண்ணாமலை** | அருள் | மிருதங்க ஆசிரியர், அரசு இசைப்பள்ளி | 8667399314 |
| **6** | **இராணிப்பேட்டை** | சரவணன் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், காஞ்சிபுரம் | 7010870088 |
| **7** | **வேலூர்** | சீனிவாசன் | இளநிலை உதவியாளர், அரசு இசைப்பள்ளி திருவண்ணாமலை | 8160682573 |
| **8** | **திருப்பத்தூர்** | கார்த்திகேயன் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 9443053614 |
| **9** | **கிருஷ்ணகிரி** | கான மூர்த்தி | தலைமையாசிரியர் அரசு இசைப்பள்ளி | 9443785837 |
| **10** | **தருமபுரி** | மணிகண்டன் | உதவியாளர், மண்டலக் கலை பண்பாட்டு மையம் | 9944457244 |
| **11** | **நாமக்கல்** | தில்லை சிவக்குமார் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 9443224921 |
| **12** | **சேலம்** | ராமசந்திரன் | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 9952665007 |
| **13** | **ஈரோடு** | யுவராஜ் | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 7373337966 |
| **14** | **திருப்பூர்** | சரவண மாணிக்கம் | தலைமையாசிரியர் அரசு இசைப்பள்ளி | 9566473769 |
| **15** | **நீலகிரி** | சண்முகம் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 9943433742 |
| **16** | **கோயம்புத்தூர்** | சக்திகுமரன் | உதவியாளர், மண்டலக் கலை பண்பாட்டு மையம் | 9442213864 |
| **17** | **கரூர்** | ரேவதி | தலைமையாசிரியை அரசு இசைப்பள்ளி | 9500277994 |
| **18** | **திருச்சிராப்பள்ளி** | இளங்கோவன் | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 8870009591 |

| | | | | |
|---|---|---|---|---|
| **19** | **அரியலூர்** | நடராஜன் | தேவார ஆசிரியர், அரசு இசைப்பள்ளி, பெரம்பலூர் | 9994036371 |
| **20** | **பெரம்பலூர்** | ராஜேஸ்வரி | தலைமையாசிரியை அரசு இசைப்பள்ளி | 9443377570 |
| **21** | **புதுக்கோட்டை** | திருவேணி | தலைமையாசிரியை அரசு இசைப்பள்ளி | 9500388896 |
| **22** | **தஞ்சாவூர்** | வடிவேல் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 9655077051 |
| **23** | **திருவாரூர்** | தீபா | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 9585380555 |
| **24** | **நாகப்பட்டிணம்** | விஜயபாலன் | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 9943969492 |
| **25** | **மயிலாடுதுறை** | முருகேசன் | மிருதங்க ஆசிரியர் அரசு இசைப்பள்ளி | 9943932581 |
| **26** | **கடலூர்** | கோபாலகிருஷ்ணன் | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 9952798623 |
| **27** | **விழுப்புரம்** | தமிழ்ச் செல்வன் | வயலின் ஆசிரியர் , அரசு இசைப்பள்ளி | 8248650837 |
| **28** | **கள்ளக்குறிச்சி** | கௌதம் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 9952401847 |
| **29** | **மதுரை** | ரமீசா பேகம் | உதவியாளர், மண்டலக் கலை பண்பாட்டு மையம் | 9500008204 |
| **30** | **திண்டுக்கல்** | தமிழரசி | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 9566718704 |
| **31** | **தேனி** | தனுஷ்கோடி | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 9488270681 |
| **32** | **இராமநாதபுரம்** | லோக சுப்பிரமணியம் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 9842567308 |
| **33** | **சிவகங்கை** | ராஜ்குமார் | ஒருங்கிணைப்பாளர், பகுதி நேர கலை பயிற்சி மையம் | 9786341558 |
| **34** | **விருதுநகர்** | ஆறுமுகம் | பரதநாட்டிய ஆசிரியர், அரசு இசைப்பள்ளி | 8098091257 |
| **35** | **திருநெல்வேலி** | திருமதி செல்வி மகேஸ்வரி | உதவியாளர், கலை பண்பாட்டுத்துறை | 9025582058 |
| **36** | **தென்காசி** | கணேசன் | நாட்டுப்புறக்கலைஞர்கள் நலவாரியம் | 8122610700 |
| **37** | **தூத்துக்குடி** | சிவகாமசெல்வி | தலைமையாசிரியை அரசு இசைப்பள்ளி | 9487739296 |
| **38** | **கன்யாகுமரி** | ஜெயராஜ் | திட்ட அலுவலர் ஜவகர் சிறுவர் மன்றம், | 7598101177 |